Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 190 | உள்ளூர் - 09.07.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 190 | வெளியூர் - 10.07.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**சுக்கிரன் பெயர்ச்சி... செல்வ மழையில் நனையும் ராசிகள்?**

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி: 750 காலியிடங்கள்!**

**விஜய்யின் நடவடிக்கை: தூக்கி கொண்டாடும் மக்கள்!**

**இந்திய குற்ற கும்பல்களுக்கு குறி.. அமெரிக்கா தீவிரம்!**

## அமெரிக்கா-ஈரான் மோதல் தீவிரம்; இந்திய சந்தையில் ₹8 லட்சம் கோடி இழப்பு!

வாஷிங்டன், ஜூலை. 09–

ஈரான் அமெரிக்கா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளும் பரஸ்பர தாக்குதலில் ஈடுபட்டுள்ளன. ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஏற்பட்ட பதற்றம் உலகளாவிய வர்த்தகம் மற்றும் கச்சா எண்ணெய் விநியோகத்தில் புதிய அச்சத்தை உருவாக்கியுள்ளது. அமெரிக்காவின் தாக்குதலுக்கு பதிலடியாக ஈரானும் நடவடிக்கை மேற்கொண்டதால், மத்திய கிழக்கில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.





இந்த சூழலில் சர்வதேச சந்தையில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை சுமார் 5% உயர்ந்து, ஒரு பேரல் 78 டாலரைத் தாண்டியது. இதன் தாக்கமாக உலகின் முக்கிய பங்குச் சந்தைகளுடன் இந்திய பங்குச் சந்தையும் கடும் சரிவை சந்தித்தது. சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி குறியீடுகள் தலா சுமார் 2% வரை வீழ்ச்சியடைந்தன. ஒரே நாளில் முதலீட்டாளர்களுக்கு சுமார் ₹8 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டதாக சந்தை தரவுகள் தெரிவிக்கின்றன. எண்ணெய் விலை உயர்வு இந்தியாவில் பணவீக்கம் மற்றும் இறக்குமதி செலவுகளை அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக சந்தை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## “என்னைக் கொல்ல ஈரான் சதி..” - டிரம்ப்!

அமெரிக்கா, ஜூலை. 09–

உடன்பாட்டை மீறி ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியில் வணிக கப்பல்களை தாக்கியதால் ஒப்பந்தத்தை அதிரடியாக ரத்து செய்து ஈரான் மீதான தாக்குதலை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ளது.

ஈரானின் 80க்கும் மேற்பட்ட ராணுவ நிலைகள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது.



இன்னும் தாக்குதல்கள் தீவிரமடையும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்துள்ளார். இதனிடையே ஈரான் தன்னை படுகொலை செய்ய திட்டமிட்டு வருவதாகவும், அவர்களின் ஹிட் லிஸ்டில் தனது பெயர் முதன்மையாக உள்ளதாகவும் டிரம்ப் அச்சம் தெரிவித்துள்ளார். துருக்கியில் நடைபெற்று வரும் நேட்டோ உச்சி மாநாட்டின் இடையே செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், “இதுவரை நான் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பித்திருக்கலாம், ஆனால் அது எப்போதும் நீடிக்காது” என கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஈரான் பேச்சுவார்த்தை குழுவை சாடிய டிரம்ப், “அவர்களை எனக்குச் சுத்தமாகப் பிடிக்காது.

அவர்களுடன் நாம் தேவையில்லாமல் காலத்தை வீணடித்துவிட்டோம். இனி நாம் நம்முடைய அடுத்தகட்ட வேலையைப் பார்க்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

துருக்கியில் நடந்த நேட்டோ உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் திரும்பிக்கொண்டிருந்தபோது, செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப்,

“நாங்கள் அவர்களை (ஈரானை) மிக கடுமையாக தாக்கினோம். நாங்கள் அவர்களை 20–க்கு 1 என்ற விகிதத்தில் தாக்கினோம். அவர்கள் எங்களை தாக்கும் ஒவ்வொரு முறையும், நாங்கள் அவர்களை 20 மடங்கு தாக்குவோம்.” என்று கூறினார்.

## கரூரில் 32 பேருக்கு அரசுப் பணி: முதல்-அமைச்சர் விஜய் வழங்குகிறார்!

கரூர், ஜூலை,. 09–

தமிழக முதல்– அமைச்சர் விஜய் ஜூலை 10–ந் தேதி கரூருக்கு செல்ல உள்ளார். கூட்ட நெரிசலில் சிக்கி இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அவர் அரசு பணி ஆணை வழங்க உள்ளார்.



கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு பணிக்கான ஆணை வழங்குவதற்காக தமிழக முதல்–அமைச்சர் விஜய் ஜூலை 10–ந் தேதி (வெள்ளிக்கிழமை) கரூருக்கு செல்கிறார். தொடர்ந்து அவர் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளார்.

முன்னதாக அவர் காலை 11 மணிக்கு விமானம் மூலம் திருச்சி செல்கிறார். பின்னர் அங்கிருந்து காரில் புறப்பட்டு கரூர் செல்கிறார். அப்போது வழிநெடுகிலும் விஜய்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. தொடர்ந்து அவர் கரூர்–சேலம் பைபாஸ் சாலையில் உள்ள அட்லஸ் கலையரங்க மைதானத்தில் நடைபெற உள்ள மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார். இதற்காக கலையரங்க மைதானத்தில் பிரமாண்ட பந்தல் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனைத்தொடர்ந்து தமிழக முதல்–அமைச்சர் விஜய் அங்கிருந்து புறப்பட்டு அரசு சுற்றுலா மாளிகைக்கு சென்று சிறிது நேரம் ஓய்வெடுக்க உள்ளார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்ள உள்ளார்.

இதில் கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் பயனாளிகளுக்கு அரசு பணிக்கான ஆணை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

இதன்படி பல்வேறு அரசுத் துறையின் கீழ் பணியாற்றும் வகையில் 32 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்க உள்ளார். மேலும் ரூ.1700 கோடி மதிப்பீட்டில் தோல் அல்லாத (Non–Leather) காலணிகளை உற்பத்தி செய்யும் புதிய தனியார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிறார். இந்த தொழிற்சாலையின் மூலம் சுமார் 13,500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நிகழ்ச்சி முடிந்தபின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருச்சி விமான நிலையத்திற்கு சென்று சென்னைக்கு புறப்பட்டு செல்கிறார்.

இதையொட்டி கரூரில் 6,500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். முதல்–அமைச்சரின் வாகனம் செல்லும் வழி உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## பட்ஜெட்டில் தொழில்துறை திட்டங்கள்/ அறிவிப்புகள்..!

சென்னை, ஜூலை. 09–

தமிழ்நாடு சட்டசபையில் விரைவில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட இருப்பதையொட்டி தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய் தினமும் அரசு துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இதை தொடர்ந்து தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையில் தொழில்துறை சார்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.



இந்தக் கூட்டத்தில் புதிய தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு தொழில் தொடங்க உள்ளன என்பது குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

முதலீடுகளை ஈர்ப்பது, வேலை வாய்ப்புகளை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா மற்றும் தொழில்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குறிப்பாக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது பற்றியும் முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

பட்ஜெட்டில் அறிவிக்க வேண்டிய புதிய தொழில் திட்டங்கள், அறிவிப்புகள் பற்றியும் முதலமைச்சர் விஜய் ஆலோசனை மேற்கொண்டார்.

**ஈரான் மீது அமெரிக்காவின் மாபெரும் தாக்குதல்**

# விமான நிலையம் குறிவைத்து குண்டுவீச்சு

# ஹார்முஸ் பதற்றம் உச்சம்!

**எண்ணெய் விலை உயர்வு; உலக நாடுகள் கவலை!!**



வாஷிங்டன், ஜூலை. 09–

ஈரான்–அமெரிக்கா இடையிலான மோதல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியில் வணிகக் கப்பல்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாக குற்றம்சாட்டிய அமெரிக்கா, ஈரானின் முக்கிய பகுதிகள் மீது வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. இதில் இரான்ஷாஹர் விமான நிலையம் குறிவைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. புஷெர், பந்தர் அப்பாஸ், சிரிக் மற்றும் கொனாரக் சபஹார் பகுதிகளிலும் வெடிச்சத்தங்கள் கேட்டதாக ஈரான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், போர் நிறுத்தப் புரிந்துணர்வு முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்து, ஹார்முஸ் வழித்தடத்தில் கப்பல் போக்குவரத்துக்கு அச்சுறுத்தல் தொடர்ந்தால் மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.

இதற்கு பதிலளித்த ஈரான், அமெரிக்காவின் தாக்குதல் சர்வதேச ஒப்பந்தங்களை மீறும் செயல் என்றும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதிய மோதலால் மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் உயரத் தொடங்கியுள்ளது. போர் நீடித்தால் உலக பொருளாதாரத்திலும், இந்தியாவின் எரிபொருள் செலவிலும் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

## சீனாவில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 39 பேர் பலி!

பெய்ஜிங், ஜூலை. 09–

தென் சீனாவின் குவாங்சி பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது.

குறிப்பாக ஒருசில பகுதிகளில் 90 சென்டிமீட்டருக்கும் மேல் அதி கனமழை பெய்தது. இதனால் நானிங் நகரில் உள்ள அணை நிரம்பியதுடன், திடீரென உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது.



ஒரு அணை உடைந்த சம்பவத்தில் மட்டும் அதிகபட்சமாக 26 பேர் உயிரிழந்ததாக, அந்நகரின் துணை மேயர் தெரிவித்துள்ளார். பிற வெள்ள பாதிப்புகளிலும் உயிரிழப்பு பதிவாகியுள்ளது. மழை, வெள்ள பாதிப்புகளில் மொத்தம் 39 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்கும் பணியில் ட்ரோன்கள் மற்றும் ஆயிரக்கணக்கான படகுகளுடன் 8 ஆயிரம் மீட்பு குழுவினர் ஈடுபடுத்தப்பட்டனர். சுமார் 1,30,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்பட்டனர். தொடர்ந்து மீட்புப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மீண்டும் அதி கனமழைக்கான எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது அப்பகுதி மக்களிடையே கலக்கமடையச் செய்துள்ளது.

## வயநாடு நிலச்சரிவு: உயரும் பலி எண்ணிக்கை!

வயநாடு, ஜூலை. 09–

கேரளம் மாநிலம் வயநாடு மாவட்டம் மேப்பாடி அடுத்த கல்லாடி பகுதியில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. வயநாடு, கோழிக்கோடு மாவட்டங்களை இணைக்கும் வகையில் சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது. இந்த பணியில் வடமாநில தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர்.



நிலச்சரிவில் சிக்கி மாயமான 5 பேரில் ஒருவரது உடல் சடலமாக மீட்கப்பட்டது. தேடுதல் பகுதியின் 1–ல் இருந்து சடலம் மீட்கப்பட்டதாக அமைச்சர் ஏ.பி.அனில்குமார் தெரிவித்திருந்தார். எஞ்சிய 4 பேரைத் தேடும் பணி தீவிரம் நடைபெற்று வரும் நிலையில், காணாமல் போனவர்களில் மேலும் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. காணாமல் போன மேலும் 3 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நிலச்சரிவில் சிக்கி காயமடைந்த 10 பேரில், 3 பேர் சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாகவும், 4 பேர் இன்னும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவர்களில் 2 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். நிலச்சரிவு குறித்து ஆய்வு செய்ய விசாரணைக் குழு ஒன்றை மாநில அரசு அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 09.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 25-ம் தேதி

# வாழ்க்கை ரகசியம்!




ஒரு மனிதன் வெற்றிகரமான வாழ்க்கைக்கு கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்கள் மற்றும் கொள்கைகள்;.

பணக்கஷ்டம் இல்லாத வசதியான மற்றும் ஆடம்பரமான வாழ்க்கை வாழ வேண்டுமென்பதுதான் அனைவரின் ஆசையாக இருக்கும். இருப்பினும், இந்த ஆசை அனைவருக்கும் நிறைவேறுகிறதா என்றால் நிச்சயம் இல்லை என்றுதான் கூற வேண்டும். உங்களுக்கும் செல்வந்தராக வேண்டும் என்ற ஆசை இருந்தால், இந்த 4 கொள்கைகளைப் பின்பற்றுங்கள்.

ஒருவர் வாழ்க்கையில் ஜெயிக்க அவரிடம் இலட்சியம் அவசியம் இருக்க வேண்டும். அதிகப் பணம் ஈட்டுவதில் உங்கள் செயல்பாடுகளைத் துரிதப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இலட்சியத்தை நிர்ணயிக்க முடியாத ஒருவரால் ஒருபோதும் வெற்றியாளராகவோ அல்லது செல்வந்தராகவோ மாற முடியாது. ஒருவர் சரியான வழியில் பணம் சம்பாதிக்க வேண்டும், மேலும், எப்போதும் தங்கள் இலட்சியத்தின் மீது உறுதியான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

**தானம் செய்வது ;**

கோவிலில் அடிக்கடி தானம் செய்வது இறைவனின் அருளைப் பெற்றுத் தருவதோடு செல்வத்தையும் பெருக்குகிறது. இறைவனின் அருளால் இப்படி செய்பவர்கள் வீட்டில் வறுமை ஒருபோதும் ஏற்படாது. தானம் செய்வது நல்ல செயளாக இருந்தாலும், அது ஒரு வரம்பிற்கு உட்பட்டே செய்யப்பட வேண்டும். அளவுக்கு அதிகமாகத் தானம் செய்வது இழப்புகளுக்கு வழிவகுக்கும். இதனால் அவர்களிடம் உள்ள செல்வம் அழியத் தொடங்கலாம்.

**நல்ல இடத்தில் வசிக்க வேண்டும்;**

வாழ்க்கையில் செல்வந்தராகவோ அல்லது பொருளாதார பலம் கொண்டவராகவோ இருக்க விரும்பினால், செல்வந்தர்கள், வியபாரிகள், கற்றறிந்தவர்கள், வீரர்கள், மருத்துவர்கள் மற்றும் பல்வேறு வேலைவாய்ப்புகள் நிறைந்த ஒரு இடத்தில் நீங்கள் வசிக்க வேண்டும். இத்தகைய இடங்களில் வசிப்பது அறிவை வளர்ப்பதுடன், பண வரவையும் பெருக்குவதாக நம்பப்படுகிறது. தவறான இடத்தில் வசிப்பது ஒருவரின் செல்வத்தை வெகுவாக குறைக்கும்.

**முதலீடு செய்ய வேண்டும் :**

உலகின் மிகப்பெரிய செல்வந்தர்கள் கூட சேமிப்பில் கவனம் செலுத்துகிறார்கள். எனவே பணக்காரராக விரும்புபவர்கள் நிச்சயம் பணத்தை சேமிக்க வேண்டும். இக்கட்டான காலங்களுக்காக எப்போதும் பணத்தைச் சேமித்து வைக்க வேண்டும். ஏனெனில், வறுமை சூழும் காலகட்டத்தில் மற்றவர்கள் உங்களைக் கைவிடும்போது, இந்தச் சேமிப்பு உங்களுக்குப் பெரிதும் உதவும். பணத்தை வீணடிப்பதற்குப் பதிலாக, அதைச் சேமிப்பதில் கவனம் செலுத்த வேண்டும், மேலும், இந்த சேமிப்பை எதிர்காலத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். இந்த 4 பழக்கங்களை தங்கள் வாழ்க்கையில் உறுதியாக கடைபிடிப்பவர்கள் நிச்சயம் செல்வந்தராக மாறுவார்கள்.






தமிழக காவல்துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி, பொதுமக்களின் புகார்கள் மற்றும் குறைகளுக்கு விரைவாகவும் திறம்படவும் தீர்வு காணும் நோக்கில், ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை பொதுமக்கள் குறைதீர்ப்பு நாள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, (08.07.2026) நாமக்கல் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு திரு.யாதவ் கிரிஷ் அசோக் இ.கா.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையிடம் திரு. அண்ணாதுரை அவர்கள். மேலும் அனைத்து உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகங்களிலும் மற்றும் காவல் நிலையங்களிலும் பொதுமக்கள் தங்களது புகார் மனுக்களை அளித்தனர். அனைத்து மனுக்களும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு, அவற்றின் மீது விரைவாகவும் திறம்படவும் நடவடிக்கை எடுத்து, பொதுமக்களுக்கு உரிய தீர்வு கிடைக்கச் செய்யப்படும் என நாமக்கல் மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் மின்தடையை போக்க புதிய திட்டம் அமல்!

சென்னை, ஜூலை. 09–

அனைத்து தலைமை பொறியாளர்கள், மின் பகிர்மான அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மாநிலம் முழுவதும் பெரும்பாலான பகுதிகளில் மின்வினியோகம் சீராக இருந்தாலும், சில குறிப்பிட்ட துணை மின் நிலையங்கள், மின் பாதைகள் மற்றும் மின் உபகரணங்களில் மீண்டும், மீண்டும் மின்தடை ஏற்படுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளது.

இந்த பிரச்சினைகளை தற்காலிகமாக சரிசெய்வதை விட,அதன்மூலக்காரணத்தை கண்டறிந்து நிரந்தர தீர்வு காண வேண்டும். இதற்காக 'ஆர்.டி.இ.பி.' என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் கடந்த 6 மாதங்களில் அடிக்கடி மின்தடை ஏற்பட்ட பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மின்தடை அடிக்கடி நிகழ்தல், பாதிக்கப்பட்ட நுகர்வோர் எண்ணிக்கை, சேவை பாதிப்பு உள்ளிட்ட அம்சங்கள் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.




ஒவ்வொரு மின்தடைக்கும் 'மூலக்காரண பகுப்பாய்வு' எனப்படும் அறிவியல் அடிப்படையிலான காரண ஆய்வு மேற்கொள்ளப்படும். மின் மாற்றி கோளாறு, கேபிள் பழுது, பாதுகாப்பு அமைப்பு செயலிழப்பு, அதிக சுமை, விலங்குகள் அல்லது பறவைகள் காரணமாக கோளாறுகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் ஆய்வு செய்யப்பட உள்ளன. திட்டத்தை கண்காணிக்க தலைமையகத்தில் மாநில அளவிலான நிபுணர் குழு அமைக்கப்பட உள்ளது. இந்தக்குழு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அணி இணைந்து மாநிலம் முழுவதும் ஏற்படும் மின் தடையை ஆய்வு செய்து, சிறந்த தொழில்நுட்ப நடைமுறைகளை பரிந்துரைக்கும்.

புதிய துணை மின் நிலையங்கள், கூடுதல் மின் பாதைகள், திறன் மேம்பாடு, 'நெட்வொர்க்' தானியக்கம் உள்ளிட்ட நீண்டகால உள்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். இந்த திட்டத்தின் மூலம் மீண்டும், மீண்டும் ஏற்படும் மின்சார தடைகள் குறைவதோடு, மின்சார வினியோக நம்பகத்தன்மை உயர்ந்து, நுகர்வோருக்கு தடையற்ற மின்சாரம் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம், ஜல்லிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில், பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று 460 பயனாளிகளுக்கு ரூ.8.32 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் வழங்கினார். உடன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன் உள்ளார்.

# கூடங்குளம் முதலாவது அணு உலையில் மீண்டும் மின் உற்பத்தி நிறுத்தம்!

கூடங்குளம், ஜூலை. 09–

டர்பனில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்ப கோளாறு காரணமாக கூடங்குளம் முதலாவது அணு உலையில் மீண்டும் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.



நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷிய நாட்டின் நிதி உதவியுடன் தலா 1,000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது. நேற்று மாலை முதலாவது அணு உலையின் டர்பன் பகுதியில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதனால் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் உடனடியாக பழுதை சரிசெய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஏற்கனவே கடந்த 4–ந் தேதி, முதலாவது அணு உலையில் உள்ள ஜெனரேட்டரில் ஏற்பட்ட பழுது காரணமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. பழுது சரிசெய்யப்பட்ட பிறகு கடந்த 6–ந் தேதி தான் மின் உற்பத்தி தொடங்கப்பட்டது. இந்நிலையில் நேற்று டர்பனில் ஏற்பட்ட பழுது காரணமாக மீண்டும் முதலாவது அணு உலையில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. அங்கு அடுத்தடுத்து பழுது ஏற்பட்டு வரும் நிலையில், 2–வது அணு உலையில் வழக்கம்போல் 1,000 மெகாவாட் மின்உற்பத்தி தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# ராமர் கோவில் காணிக்கையில் மெகா திருட்டு!

அயோத்தி, ஜூலை. 09–

அயோத்தி ராமர் கோவிலுக்கு பக்தர்கள் வழங்கிய காணிக்கை பெருமளவில் திருடப்பட்டு உள்ளது. நாட்டையே உலுக்கிய இந்த முறைகேடு தொடர்பாக காணிக்கை எண்ணும் பணியில் ஈடுபட்டு வந்த 8 பேரை போலீசார் கைது செய்துள்ளனர். அதன்படி அவினாஷ் சுக்லா, அனுகல்ப் மிஸ்ரா, லவகுஷ் மிஸ்ரா, மணீஷ் குமார் யாதவ், கருணேஷ் பாண்டே, ராம்சங்கர் மிஸ்ரா, சுபாஷ் ஸ்ரீவஸ்தவா மற்றும் டின்னு என்கிற ராம்சங்கர் யாதவ் ஆகிய 8 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்தி வரும் சிறப்பு புலனாய்வுக்குழு வழங்கிய முதற்கட்ட அறிக்கை அடிப்படையில் இந்த கைது நடவடிக்கைகள் நடந்தன. கைதான 8 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.



இதற்கிடையே புலனாய்வுக்குழு வழங்கிய அறிக்கையில் இடம்பெற்றுள்ள விவரங்கள் வெளியாகி இருக்கிறது.

அதன்படி இந்த முறைகேட்டில் முக்கிய குற்றவாளியாக அவினாஷ் சுக்லா (வயது 30) அடையாளம் காணப்பட்டு உள்ளார். விசாரணை அறிக்கையில் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு உள்ள இவர், 40 நாட்களில் 70 முறை ராமர் கோவில் காணிக்கையை திருடி உள்ளார். அதாவது காணிக்கை எண்ணும் பணியின்போது, பெரிய மதிப்பு கொண்ட பணக்கட்டுகளையும், சில்லறை ரூபாய் நோட்டுகளையும் திருடி மறைப்பது கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகி இருக்கிறது. கண்காணிப்பு கேமரா பதிவுகள், அவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்ட ஆவணங்கள், வங்கிக்கணக்கு விவரங்கள் மற்றும் சாட்சிகள் அளித்த வாக்குமூலங்கள் அடிப்படையில் அவினாஷ் சுக்லாவுக்கு பெரும் பங்கு இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

மேலும் அவரது வீட்டில் இருந்து அதிக அளவில் பணம் கைப்பற்றப்பட்டதும் இதை உறுதி செய்திருக்கிறது. அந்தவகையில் ரூ.20.39 லட்சம் பணம், 1,121 அமெரிக்க டாலர், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள், சொகுசு கார் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன. காணிக்கை எண்ணும் பணிக்காக ரூ.15 ஆயிரம் மட்டுமே அவினாஷ் சுக்லா சம்பளமாக பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைத்தவிர 'ராமராஜ்ய நிதி' என்ற வாசகம் பொறிக்கப்பட்டு, அதில் கியூ.ஆர் குறியீடு ஒட்டப்பட்டிருந்த காணிக்கைப் பெட்டி ஒன்றையும் போலீசார் கைப்பற்றினர்.

திருடப்பட்ட காணிக்கை பணத்தை மறைப்பதிலும், அகற்றுவதிலும் சுக்லாவுக்கு பிற பணியாளர்கள் உதவியதும் கண்காணிப்பு கேமரா பதிவு மூலம் உறுதி செய்யப்பட்டு இருந்தது. அந்தவகையில் மொத்தம் 6 பேர் நேரடியாக இந்த கையாடலில் ஈடுபடுவதை கண்காணிப்பு கேமரா பதிவுகள் உறுதி செய்திருக்கின்றன. இதுதொடர்பான விசாரணை மேலும் தீவிரமாக நடந்து வருகிறது.

# NPS-ல் 2; தன்னாட்சி நிறுவன ஊழியர்களுக்கும் வாய்ப்பு!




புதுடெல்லி, ஜூலை. 09–

மத்திய அரசின் தன்னாட்சி நிறுவனங்கள் (ஐஐடி, என்ஐடி, எய்ம்ஸ், மத்திய பல்கலைக்கழகங்கள் உள்ளிட்டவை) பணியாளர்களும் இனி NPS திட்டத்தில் புதிய முதலீட்டு விருப்பங்களைத் தேர்வு செய்யலாம் என நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

LC–75 High 75% வரை பங்குச்சந்தை முதலீடு; அதிக ரிஸ்க் எடுத்து நீண்டகால லாபம் விரும்புவோருக்கு ஏற்றது.

Aggressive Life Cycle Fund சுமார் 50% பங்குச்சந்தை முதலீடு; 45 வயதுக்குப் பிறகு ரிஸ்க் படிப்படியாகக் குறையும்.

ஊழியர்கள் தங்களின் வயது மற்றும் முதலீட்டு விருப்பத்திற்கு ஏற்ப இந்த இரண்டு திட்டங்களில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்து, அதிகாரப்பூர்வ இணையதளம் அல்லது மொபைல் ஆப் மூலம் ஆன்லைனில் முதலீடு செய்யலாம். இந்த மாற்றம் ஓய்வூதிய திட்டமிடலுக்கு கூடுதல் நெகிழ்வுத்தன்மையை வழங்கும் என நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.


# கோஸ்டல் ஜங்ஷனில் தனியார் பேருந்து கூடுதல் கட்டணம்: பயணிகள் அதிருப்தி!



நாமக்கல், ஜூலை. 09–

நாமக்கல் – திருச்செங்கோடு வழித்தடத்தில், கோஸ்டல் ஜங்ஷனில் இருந்து ஏறும் பயணிகளிடம் அரசு பேருந்துகள் ரூ.20 மட்டுமே வசூலிக்கின்றன. ஆனால், தனியார் பேருந்துகள் கோஸ்டல் ஜங்ஷனை தனி ஸ்டேஜாக ஏற்காமல் ரூ.30 கட்டணம் வசூலிப்பதாக பயணிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதனால் தினமும் பயணம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கூடுதல் செலவால் பாதிக்கப்படுகின்றனர். அரசு பேருந்துகளைப் போல கோஸ்டல் ஜங்ஷனை தனி ஸ்டேஜாக அறிவித்து, தனியார் பேருந்துகளிலும் கட்டணத்தை குறைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# ஆகஸ்ட் 1–ல் அதிர்ஷ்ட யோகம்! சுக்கிரன் பெயர்ச்சி... செல்வ மழையில் நனையும் ராசிகள்?




2026 ஆகஸ்ட் 1ஆம் தேதி, சுக்கிரன் கன்னி ராசிக்குள் பெயர்ச்சி அடைகிறார். ஜோதிடத்தில் செல்வம், வசதி, ஆடம்பரம், காதல், திருமணம் மற்றும் கலைக்கு அதிபதியாகக் கருதப்படும் சுக்கிரனின் இந்த பெயர்ச்சி, சில ராசிக்காரர்களுக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கும் என ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

இந்த பெயர்ச்சியால் ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம் ஆகிய ராசிக்காரர்களுக்கு அதிக சுபபலன்கள் கிடைக்கும் என்று கணிக்கப்படுகிறது. பணவரவு அதிகரித்தல், புதிய வேலை வாய்ப்பு, தொழிலில் லாபம், பதவி உயர்வு, குடும்பத்தில் மகிழ்ச்சி, திருமண யோகம் மற்றும் முதலீடுகளில் நல்ல பலன் கிடைக்க வாய்ப்புள்ளது.

அதே நேரத்தில், சில ராசிக்காரர்கள் செலவுகளை கட்டுப்படுத்தி, முக்கிய முடிவுகளை கவனமாக எடுப்பது நல்லது என்றும் ஜோதிடர்கள் அறிவுறுத்துகின்றனர்.

**சுக்கிரன் பெயர்ச்சி 2026 யாருக்கு யோகம்?**

**ரிஷபம்:** பணவரவு, சொத்து சேர்க்கை
**மிதுனம்:** தொழில் முன்னேற்றம்
**கன்னி:** அதிர்ஷ்டம், புதிய வாய்ப்புகள்
**துலாம்:** குடும்ப மகிழ்ச்சி, திருமண யோகம்
**மகரம்:** வருமான உயர்வு, பதவி முன்னேற்றம்

**குறிப்பு:** இவை பாரம்பரிய ஜோதிட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட பலன்கள். தனிநபர் ஜாதக அமைப்பைப் பொறுத்து பலன்கள் மாறுபடலாம்.

# SMS கட்டணத்திற்கு RBI கட்டுப்பாடு... வாடிக்கையாளர்களுக்கு நிம்மதி!





சென்னை, ஜூலை. 09–

வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் சில வகை எஸ்எம்எஸ் (SMS) அலர்ட்டுகளுக்கு இனி கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று இந்திய ரிசர்வ் வங்கி (RBI) உத்தரவிட்டுள்ளது. இணக்கம் (Compliance), விழிப்புணர்வு மற்றும் விளம்பர நோக்கங்களுக்காக அனுப்பப்படும் எஸ்எம்எஸ்களுக்கு இந்த விதிமுறை பொருந்தும். இதுவரை பல வங்கிகள் காலாண்டுக்கு ரூ.15 முதல் ரூ.18 வரை எஸ்எம்எஸ் கட்டணமாக வசூலித்து வந்தன.

மேலும், ரூ.500–க்கும் குறைவான பரிவர்த்தனைகளுக்கான எஸ்எம்எஸ் அனுப்புவது இனி கட்டாயமல்ல; வங்கிகள் விருப்பப்பட்டால் மட்டுமே அனுப்பலாம் என்றும் RBI தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கையால் வாடிக்கையாளர்களுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.60 வரை சேமிப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இந்த உத்தரவால் வங்கிகளுக்கு கணிசமான வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் கணக்கு பராமரிப்பு கட்டணம் அல்லது பிற சேவைக் கட்டணங்களில் மாற்றங்கள் செய்யப்படலாம் என நிபுணர்கள் கூறுகின்றனர். அதே நேரத்தில், Push Notification, மொபைல் ஆப் அறிவிப்புகள் மற்றும் வாட்ஸ்அப் போன்ற டிஜிட்டல் சேவைகளை வங்கிகள் அதிகமாக பயன்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



# சினிமா துளிகள்..!

## சினிமா அப்டேட்ஸ்...!

**கோலிவுட்**

நடிகர் ஷிவ் பண்டிட், இயக்குநர் ஜேசன் சஞ்சய் இயக்கும் "சிக்மா" திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படம்,ஜூலை 31 அன்று உலகம் முழுவதும் வெளியாகும் நிலையில், ரசிகர்களிடம் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**பாலிவுட்**

நடிகை ஆலியா பட் நடித்த அதிரடி உளவு திரைப்படமான "ஆல்பா" திரையரங்குகளில் நல்ல வரவேற்பைப் பெற்று வசூலில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

"ஆல்பா" படத்திற்காக ஆலியா பட் மற்றும் ஷர்வரி பல மாதங்கள் கடுமையான உடற்பயிற்சி மற்றும் சண்டைப் பயிற்சி மேற்கொண்டதாக படக்குழு தெரிவித்துள்ளது.

**ஹாலிவுட்**

விடுமுறையை முன்னிட்டு ஜூலை மாதத்தில் பல பெரிய ஹாலிவுட் திரைப்படங்கள் உலகம் முழுவதும் வெளியாகத் தயாராகி வருகின்றன. தயாரிப்பு நிறுவனங்கள் தீவிர விளம்பரப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

நலம் நலமறிய..!
மருத்துவ குறிப்புகள்



# பெண்களே... ஆரோக்கியமாகவும் ஃபிட்டாகவும் இருக்க இந்த 10 பழக்கங்கள் போதும்!

## பெண்களே... ஃபிட்டாக வாழுங்கள்!




குடும்பத்தை கவனிக்கும் பெண்கள், தங்களின் உடல்நலத்தையும் சமமாக கவனிப்பது அவசியம். திருமணம், குழந்தை பிறப்பு போன்ற காரணங்களால் பல பெண்கள் உடற்பயிற்சியையும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் புறக்கணிக்கிறார்கள். ஆனால் தினசரி சில நல்ல பழக்கங்களை பின்பற்றினால் ஆரோக்கியமாகவும் ஃபிட்டாகவும் இருக்க முடியும்.

முக்கிய 10 குறிப்புகள்:

தினமும் உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்குங்கள்.

தேவையெனில் திறமையான பயிற்சியாளரின் ஆலோசனை பெறுங்கள்.

ஒரே மாதிரியான உணவு, பயிற்சிகளைத் தவிர்த்து மாற்றி மாற்றி பின்பற்றுங்கள்.

உங்களுக்கு பிடித்த உடற்பயிற்சியை தேர்வு செய்து தொடர்ந்து செய்யுங்கள்.

மருத்துவர் அல்லது ஊட்டச்சத்து நிபுணரின் ஆலோசனையுடன் உணவுமுறையை அமைத்துக் கொள்ளுங்கள்.

உடற்பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட நண்பர்கள் அல்லது குழுக்களுடன் இணைந்திருங்கள்.

உடலின் ஒவ்வொரு உறுப்பின் ஆரோக்கியத்திற்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.

தெளிவான உடல்நல இலக்கை நிர்ணயித்து அதற்கேற்ப செயல்படுங்கள்.

உடற்பயிற்சியை தினசரி பழக்கமாக மாற்றுங்கள்; காலை நேரம் சிறந்தது.

பாடல் கேட்பது, இயற்கை சூழலில் நடைபயிற்சி போன்ற விருப்பங்களுடன் உடற்பயிற்சியை மகிழ்ச்சியாக மாற்றுங்கள்.

முடிவில், பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தை முன்னுரிமையாக கொண்டால் மட்டுமே குடும்பத்தையும் சமூகத்தையும் ஆரோக்கியமாக வழிநடத்த முடியும்.

# எடப்பாடி பழனிசாமி ஆலோசனை கூட்டத்தை புறக்கணித்த ஓசூர் எம்.எல்.ஏ.



சென்னை, ஜூலை. 09–

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த 3–ந்தேதி முதல் தொடர்ந்து அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். 6 நாட்கள் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டம் 6–வது நாளாக நடைபெற்றது. இன்று காலை 10 மணி அளவில் நடைபெற்ற கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் ஓசூர் தொகுதி எம்.எல்.ஏ. பாலகிருஷ்ண ரெட்டி பங்கேற்கவில்லை. அவர் ஆலோசனை கூட்டத்தை புறக்கணித்தார். சட்டமன்ற தேர்தல் தோல்விக்கு பிறகு எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி ஆகியோர் தனி அணியாக ஆலோசனை கூட்டங்களை நடத்திய போது அவர்களுடன் பாலகிருஷ்ண ரெட்டி இணைந்து செயல்பட்டவர் ஆவார். இதை தொடர்ந்து அவரது மாவட்ட செயலாளர் பதவி பறிக்கப்பட்டு அமைப்பு செயலாளர் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது. தனது மாவட்ட செயலாளர் பதவி பறிக்கப்பட்டதால் அதிருப்தி காரணமாகவே பாலகிருஷ்ண ரெட்டி எம்.எல்.ஏ. இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. ஏற்கனவே எடப்பாடி பழனிசாமி நடத்திய ஆலோசனை கூட்டங்களை இதற்கு முன்னரும் எம்.எல்.ஏ.க்கள் பலர் புறக்கணித்து உள்ளனர். ஜூலை. 7–ல் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் ஆற்காடு தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வான எஸ்.எம்.சுகுமார், திருப்பத்தூர் தொகுதி எம்.எல்.ஏ.வும், முன்னாள் அமைச்சருமான கே.சி.வீரமணி ஆகியோரும் பங்கேற்காமல் புறக்கணித்து இருந்தனர்.

தேர்தல் தோல்விக்கு பிறகு அ.தி.மு.க.வில் இருந்து பலரும் விலகி வரும் நிலையில் எடப்பாடி பழனிசாமி கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்து தொடர்ந்து ஆலோசனை கூட்டங்களை நடத்திய நிலையில் அந்த கூட்டங்களில் அ.தி.மு.க. முன்னணி நிர்வாகிகள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அ.தி.மு.க.வில் இருந்து விலகிய எம்.எல்.ஏ.க்கள் 6 பேர் த.வெ.க.வில் இணைந்து உள்ள நிலையில் எடப்பாடி பழனிசாமி நடத்திய கூட்டத்தை புறக்கணித்துள்ள எம்.எல்.ஏ.க்களும் கட்சி மாறப்போகிறார்களா? என்ற பரபரப்பும் அரசியல் களத்தில் ஏற்பட்டு உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டம் நிறைவடைந்ததும் தர்மபுரி மாவட்ட நிர்வாகிகளுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்துகிறார். தொடர்ந்து 6 நாட்களாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம் இன்றுடன் நிறைவு பெறுகிறது.

ஒவ்வொரு நாளும் நடைபெற்ற கூட்டங்களில் பேசிய எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க.வுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. விலகி செல்பவர்களை பற்றி யாரும் கவலை கொள்ள வேண்டும் என்று தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வேலை வாய்ப்பு

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கி: 750 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
அறிவிப்பு எண்: HRDD/APPR/01/2026–27 (06.07.2026)
பணி வகை: பயிற்சி பணியாளர் (Apprentice)
காலிப்பணியிடங்கள்: 750
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடங்கும் தேதி: 07.07.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 20.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
Official Website: https://www.iob.bank.in/

# நாமக்கல் மாநகராட்சியில் இயற்கை செழிப்பு உரம் விற்பனை!



நாமக்கல் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட இயற்கை செழிப்பு உரம் விற்பனை நாமக்கல் உழவர் சந்தையில் தொடங்கப்பட்டது. மாநகராட்சி ஆணையர் செல்வ பாலாஜி விற்பனையை தொடங்கி வைத்தார். 1 கிலோ உரம் ரூ.20க்கு பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. முதல் நாளிலேயே 51 கிலோ உரம் விற்பனையானது.

# வார இறுதி நாட்களை முன்னிட்டு 1,565 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!



சென்னை, ஜூலை. 09–

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் ஜெரோலின் லிஸ்பன் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில், வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 10–ந் தேதி வெள்ளிக்கிழமை அன்று 420 பேருந்துகளும், 11–ந் தேதி (சனிக்கிழமை) 350 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 10–ந் தேதி வெள்ளிக்கிழமை 55 பேருந்துகளும், 11–ந் தேதி சனிக்கிழமை 55 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதாவரத்திலிருந்து 10 மற்றும் 11–ந் தேதிகளில் கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, போளூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு நாளும் தலா 20 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் 12–ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) 445 சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# ஒட்டன்சத்திரம் பேருந்து நிலைய நுழைவாயிலில் வேகத்தடை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை!



ஒட்டன்சத்திரம், ஜூலை. 09–

பேருந்துநிலைய நுழைவாயிலில் பேருந்துகள் அதிவேகமாக கலந்துகப்படுவதால் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகள் அச்சத்துடன் சாலையை கடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. விபத்து அபாயத்தைத் தவிர்க்க, கிழக்கு மற்றும் மேற்கு நுழைவாயில்களில் உடனடியாக வேகத்தடை அமைத்தும், எச்சரிக்கை பலகைகள் நிறுவ வேண்டும் என பொதுமக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் தீ விபத்து: ரூ.3 கோடி மதிப்பிலான நிலக்கரி எரிந்து சேதம்!



தூத்துக்குடி, ஜூலை. 09–

தூத்துக்குடி துறைமுக சாலையில் உள்ள மத்திய அரசுக்கு சொந்தமான என்.டி.பி.எல். அனல்மின் நிலையத்தில் தலா 500 மெகாவாட் திறன் கொண்ட 2 மின் உற்பத்தி அலகுகள் இயங்கி வருகின்றன. மின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, சேமிப்புக் கிடங்குகளில் குவித்து வைக்கப்படுகிறது. இந்த நிலையில், நிலக்கரி குவியலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு திடீரென தீப்பிடித்தது.

அப்போது வீசிய பலத்த காற்றின் காரணமாகத் தீ மளமளவெனப் பரவியது. இதுகுறித்து தகவலறிந்த தீயணைப்பு துறையினர் 5 தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அனல்மின் நிலைய பொறியாளர்களும், பணியாளர்களும் இணைந்து அருகிலிருந்த பிற நிலக்கரி குவியல்களுக்கும், மின் உற்பத்தி அமைப்புகளுக்கும் தீ பரவாமல் தடுக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சுமார் 3 மணி நேர போராட்டத்திற்கு பின்னர் தீ முழுமையாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இருப்பினும் இந்த தொழில்நுட்ப விபத்தில் ரூ.3 கோடி மதிப்பிலான நிலக்கரி சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது. இந்த விபத்தால் மின் உற்பத்தியில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என அனல்மின் நிலைய நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்துக்கான தொழில்நுட்பக் குறைபாடுகள் குறித்து தெர்மல்நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருப்பூர் வடக்கு எம்எல்ஏவுக்கு உற்சாக வரவேற்பு!



திருப்பூர், ஜூலை 09–

திருப்பூர் வடக்கு தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திருமதி சத்தியபாமா அவர்கள் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 10 ஊராட்சிகளில் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்துக் விழாவில் கலந்து கொண்டார் அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர் மேலும் அவருக்கு ஆரத்தி எடுத்து பொன்னாடை போற்றி பட்டாசு வெடித்து பொது மக்கள் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர் அப்போது பேசிய அவர் பொங்கு பாளையம் ஊராட்சிக்கு பேருந்து வசதி மற்றும் கால்நடை மருத்துவமனை வருவதற்கான அனைத்து முயற்சியும் எடுத்து வருவதாக தெரிவித்தார் இந்த நிகழ்வில் மாவட்ட இணை செயலாளர் சுகுமார், பொருளாளர் வெள்ளைச்சாமி. ஒன்றிய கழகச் செயலாளர்கள் நந்தகோபால். ஹரிசந்திரன். மற்றும் கனிஷ்கா சிவக்குமார். பொங்கு பாளையம் ஜெயக்குமார். தமிழரசன். உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வ.உ.சிதம்பரனார் சமூக நலப்பேரவை சார்பில் பாராட்டும்.. விருதுகளும்..!





மதுரை, ஜூலை. 09–

அரசு பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கி பாராட்டுவிழா மற்றும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அறங்காவலர் முனைவர் வ. சண்முக சுந்தரத்துக்கு "அறநெறிச் செம்மல்" விருது வழங்கும் விழா ஆகியவை மதுரை தியாகத் திருவுருவம் வ.உ. சிதம்பரனார் சமூக நலப் பேரவை சார்பில் ஞாயிறன்று நடைபெற்றது. மதுரை ஆதீனம் 293 குருமகா சன்னிதானம் வழங்கினார். ஆசி வழங்கி ஊக்கத்தொகையினையும் விருதுகளை வழங்கினார்.

10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு "நாற்றங்கால் போற்றும் விழா" என்ற தலைப்பில் பாராட்டு விருது மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர், முனைவர் வ. சண்முக சுந்தரம் அவர்களுக்கு "அறநெறிச் செம்மல்" விருது, சைவத்திரு. ச. சந்திரசேகரன் அவர்களுக்கு "சைவநெறிச் செம்மல்" விருது, களக்காடு கவிஞர் வ. விஸ்வநாதன் அவர்களுக்கு "கவித் தென்றல்" விருது, தியாக தீபம் அ.பாலு அவர்களுக்கு "சேவைச் செம்மல்" விருது, திரு. வே. செந்தில் குமரன் அவர்களுக்கு "அறுசுவை அரசர்" விருது, வைகை ராஜன் அவர்களுக்கு "வைகை கொண்டான் விருதினையும் ஆதீனம் வழங்கினார்.

மதுரை 293ஆம் குரு மகா சன்னிதானம் சிறப்பு விருந்தினராக பங்கேற்று விருதுகள், மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி தனது ஆசியுரையில் வ.உ.சி அவர்களின் தியாகத்தை உணர்வு மிக்க வகையில் எடுத்துரைத்தார் மேலும் மாணவர்களுக்கு தமிழின் அருமை பற்றி மிகச் சிறப்பாக நகைச்சுவை ததும்ப பேசினார்கள்.

திரு.சோமசுந்தரம் அவர்கள் பூரண கும்ப மரியாதை செய்து ஆதீனத்தை வரவேற்றார். பேரவைத் தலைவர் ஆர்தோ டாக்டர் பி.எஸ் சண்முகம் தலைமை தாங்கினார், செயலாளர் மீ. இராம சுப்பிரமணியன் வரவேற்பு ஆற்றினார், பேராசிரியர் முனைவர் வெ. அழகப்பன், வ.உ.சி. பேரன் வ. சிதம்பரம், மூத்த பத்திரிகையாளர் ப. திருமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாணவ, மாணவிகளுக்கு திருப்பரங்குன்றம் அறங்காவலர் முனைவர் வ. சண்முகசுந்தரம் பரிசுத்தொகை வழங்கினார்கள், துணைச் செயலாளர் திரு காளீஸ்வரன் நன்றியுரை நல்கினார், தேசியகீதத்துடன் விழா நிறைவுற்றது.

# சற்று குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 09–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து ரூ.1,05,760–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.30 குறைந்து ரூ.13,220–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.245–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



திருப்பத்தூர் மாவட்டம், சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில், அதிக விபத்துகள் ஏற்படும் வெலக்கல்நத்தம் செட்டேரி சாலை சந்திப்பு பகுதியில் விபத்து நடப்பதை தடுப்பது குறித்து மாவட்ட ஆட்சியர் திரு.கு.ரவிகுமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுடன் கலந்துரையாடினார். உடன் நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் திரு.முரளி, மாவட்டப் போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம் (திருப்பத்தூர்), வெங்கடரமணன் (வாணியம்பாடி), தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) துணை மேலாளர் .ஞானசேகரன், துணைக்காவல் கண்காணிப்பாளர் மரு.ப.மகாலட்சுமி, வாணியம்பாடி நெடுஞ்சாலைத்துறை இளநிலைப்பொறியாளர் பாபுராஜ், உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.

# ராஜினாமா செய்த எம்.எல்.ஏ.க்கள் 3 பேரிடம் மீண்டும் விளக்கம் கேட்கும் சபாநாயகர்!



சென்னை, ஜூலை. 09–

கடந்த மாதம் 17–ம் தேதி சத்யபாமா, மரகதம் குமரவேல் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் சென்னை தலைமை செயலகத்தில் சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரை 3 எம்.எல்.ஏ.க்கள் நேரில் சந்தித்து பேசினர். அப்போது தங்களது ராஜினாமா முடிவு குறித்த தெளிவான விளக்கங்களை அவர்கள் சபாநாயகரிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில், தவெகவில் இணைந்த ஜெயக்குமார், மரகதம் குமரவேல், சத்யபாமா ஆகியோர் இன்று மீண்டும் சபாநாயகர் முன்பு ஆஜராகி ராஜினாமா குறித்து விளக்கம் அளிக்க உள்ளனர். ஏற்கனவே மூவரும் விளக்க கடிதம் அளித்திருந்த நிலையில், அதனை தங்களுக்கு வழங்க வேண்டும் என அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி சபாநாயகரிடம் கோரிக்கை வைத்திருந்த நிலையில் இந்த நடவடிக்கையை சபாநாயகர் எடுத்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளத்தூர் ஊராட்சி, கிராம சேவை மையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பல்வேறு பதிவேடுகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி.விஜயகுமாரி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



# இன்றைய கார்ட்டூன்




# இந்திய குற்ற கும்பல்களுக்கு குறி.. அமெரிக்கா தீவிரம்!

நாடுகடந்த குற்றச் செயல்களில் ஈடுபடும் சர்வதேச கும்பல்களை பிடிக்க அமெரிக்கா, ஆபரேஷன் 'Hard Ball' என்ற நடவடிக்கையை தொடங்கியுள்ளது. இதில் இந்தியாவில் இருந்து இயங்கி வரும் கும்பல்கள் முக்கிய குறியாக அமைந்துள்ளன.

அந்த வகையில் நாடு கடந்த கொலை, பணம் பறிப்பு, துப்பாக்கிச்சூடு, போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக பிரபல இந்திய கேங்ஸ்டர் லாரன்ஸ் பிஸ்னாய் மீது எப்பிஐ வழக்குப்பதிந்துள்ளது.

பஞ்சாபை மையமாக வைத்து இயங்கி வரும் பிஸ்னோய் கும்பலுடன், ஜஃகு பகவான்புரியா, ரவீந்தர் சிங் தண்டா ஆகிய இந்திய குற்ற கும்பல் தலைவர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மூவரின் கும்பல்களும் அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஈடுபட்ட குற்றச்செயல்களுக்காக அவர்கள் மீது எப்பிஐ வழக்குபதிந்துள்ளது. இங்கு 24 கைதுகள், 37 கிரிமினல் குற்றச்சாட்டுகளின் பின்னணியில் இந்த Hard Ball நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இவர்களுடன், குற்ற கும்பல்கள் சுநத்திரமாக இயங்க அவர்களுக்கு துணைபோவதாக பஞ்சாப் காவல் அதிகாரி குரீந்தர்ஜித்சிங் நாக்ராவின் பெயரையும் எப்பிஐ வழக்கில் சேர்த்துள்ளது.

குரீந்தர்ஜித்சிங் உட்பட இந்த கும்பல் தலைவர்களை அமெரிக்காவுக்கு நாடுகடத்த எப்பிஐ தீவிரம் காட்டி வருகிறது.

பஞ்சாபில் புரையோடிருக்கும் ஊழல் காரணமாக இந்த கும்பல்கள் கண்டங்கள் கடந்து சுந்தந்திரமாக செயல்படுவதாக அமெரிக்க நீதிமன்ற ஆவணங்களில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

**இந்திய சிறை Vs அமெரிக்க சிறை**

லாரன்ஸ் பிஸ்னோய் தற்போது குஜராத்தின்



அகமதாபாத்தில் உள்ள சமர்மதி சிறையில் உள்ளான். பகவான்புரியாவும் சிறையில் தான் இருக்கிறான். ஆனால் சிறையில் இருந்தபடியே சர்வதேச அவளில் தனது கும்பலை இவர்கள் இயக்கும் அளவுக்கு இந்திய சிறைகள் பலவீனமான பாதுகாப்புடன் உள்ளதாக எப்பிஐ தனது அறிக்கையில் குற்றம்சாட்டியுள்ளது.

அமெரிக்க துணை அட்டார்னி ஏஸேலீ இதுகுறித்து பேசுகையில், எங்கள் சிறைகளுக்கு அந்த குற்றவாளிகள் வந்தால் இப்போதுபோல சுதந்திரமாக இயங்க முடியாது என கூறி, இந்திய சிறைகளை விமர்சித்துள்ளார்.

**நிஜ்ஜார் கொலை**

இந்த குற்றவாளிகளில் லாரன்ஸ் பிஸ்னோய் மீது அமெரிக்கா தனி கண் வைத்துள்ளது. கனடாவில் ஜூன் 2023 அன்று காலிஸ்தான் அமைப்பு தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலைக்கு உத்தரவிட்டவன் பிஸ்னோய் என எப்பிஐ பதித்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக நிஜ்ஜார் கொலையில் இந்திய அரசின் அதிகாரிகளுக்கும் தொடர்பிருப்பதாக அப்போதைய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்கமாக குற்றம்சாட்டியிருந்தார். ஆனால் இதை மத்திய அரசு மறுத்தது.

இப்போது கனடாவில் மார்க் கார்னி தலைமையில் அரசு அமைந்துள்ள நிலையில், நிஜ்ஜார் கொலைக்கும் இந்திய அரசு அதிகாரிகளுக்கும் தொடர்பூ என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என என மூத்த கனேடிய போலீஸ் அதிகாரி துணை கமிஷனர் லிசா மோர்லேண்ட் நேற்று தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் நடவடிக்கையை தொடர்ந்து கனடாவின் விளக்கம் வந்துள்ளது.

**கோல்டி பிரார்**

ஆனால் அமெரிக்கா, பிஸ்னோய் மற்றும் அவனது நண்பர் சதீந்திரஜீத் சிங் என்கிற கோல்டி பிரார் தான் நிஜ்ஜார் கொலைக்கு உத்தரவிட்டவர்கள் என அடித்துக்கூறியுள்ளது.

இன்னும் சுதந்திரமாக சுற்றிக்கொண்டிருக்கும் கோல்டி பிராரை பிடிக்க அமெரிக்கா 50,000 டாலர் வெகுமதி அறிவித்துள்ளது.

**பஞ்சாப் போலீஸ் நாக்ராவின் கை**

இதனிடையே லாஸ் ஏஞ்சல்ஸ் பெடரல் ஆவணங்களின்படி, பஞ்சாப் ஸ்டேஷன் கவுஸ் அதிகாரியாக உள்ள போலீஸ் அதிகாரி குரீந்தர்ஜித்சிங் நாக்ரா, மற்றொரு குற்ற கும்பலான பகவான்புரியா கும்பலுக்காக வேலை செய்து வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வாழும் இந்திய குடும்பத்தை மிரட்டி பணம் பறிக்க இவர் பகவான்பிரியா கும்பலுக்கு துணை போயுள்ளார். பணம் தரவில்லை என்றால் பஞ்சாபில் உள்ள ஒரு கொலை வழக்கில் அவர்களை சிக்க வைத்துவிடுவேன் என கூறி லாஸ் ஏஞ்சல்ஸில் வாழும் அந்த இந்திய கும்பத்திடம் நாக்ரா 4,00,000 டாலர் புரிந்ததாக அமெரிக்க தரப்பு குற்றம்சாட்டியுள்ளது.

ஆனால் நாக்ரா மீது இந்திய அரசு இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என சுட்டிக்காட்டி, அவரையும் அமெரிக்காவுக்கு நாடுகடத்த முயற்சித்து வருவதாக அமெரிக்க துணை அட்டார்னி ஏஸேலீ தெரிவித்துள்ளார்.

# விஜய்யின் நடவடிக்கை: தூக்கி கொண்டாடும் மக்கள்!



நடிகர்கள் அரசியலுக்கு வருவது என்பது தமிழகத்திற்கு ஒன்றும் புதிதல்ல. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, சிவாஜிகணே சன் என்று அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. ஆனால், சினிமா உலகில் கொடிகட்டிப் பறந்து, அதன்பிறகு மார்க்கெட் இழக்கும்போ துதான் பலர் அரசியலுக்கு வந்திருக்கின்றனர். இதுதான், கடந்த கால சினிமா வரலாறு.

**2½ ஆண்டுகளில் ஆட்சி அமைப்பு**

ஆனால், உச்ச நட்சத்திரமாக ஜொலித்துக் கொண்டிருந்த போதே, திரைத்துறையில் இருந்து அரசியலுக்கு வந்தவர் நடிகர் விஜய். அதுவும் தமிழக வெற்றிக் கழகம் எனும் கட்சியை தொடங்கிய 2½ ஆண்டு காலத்திலேயே தமிழகத்தில் ஆட்சியையும் பிடித்துவிட்டார். பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை பிடிக்கவில்லை என்றாலும், அவர் முதலில் சொன்னதுபோல கூட்டணி ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டு, தி.மு.க. – அ.தி.மு.க. என்ற இருபெரும் திராவிட கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் ஆட்சியை நடத்த தொடங்கியிருக்கிறார்.

அவருடைய 2 மாத கால ஆட்சியில், பெண்கள் – சிறுமிகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள், மின்தடை பிரச்சினை ஆகியவை அதிகரித்து இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனர். மற்றபடி, த.வெ.க. அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் முந்தைய ஆட்சிக்கு பரவாயில்லை என்று பொதுமக்கள் சொல்லும் அளவுக்கே உள்ளது.

**அண்டை மாநிலங்களில் விஜய்**

முதல்–அமைச்சர் விஜய், நடிகராக இருந்தபோது அவருடைய திரைப்படங்களில் பல, தமிழைத் தாண்டி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளிலும் 'டப்' செய்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இதனால், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, மராட்டியம் ஆகிய மாநிலங்களிலும் விஜய்க்கு ரசிகர்கள் அதிகம். பல இடங்களில் அவருக்கு ரசிகர் மன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தமிழகத்தில் முதல்–அமைச்சர் விஜய் கொண்டுவரும் திட்டங்கள், அவருடைய செயல்பாடுகளை அண்டை மாநில தனியார் தொலைக்காட்சிகளும் செய்தியாக வெளியிட்டு வருகின்றன. இது விஜய்யினுடைய அண்டை மாநில ரசிகர்களையும், அங்குள்ள பொதுமக்களையும் ஈர்த்து வருகின்றன.

**தமிழக மக்கள் கொடுத்து வைத்தவர்கள்...**

அந்த வகையில், நேற்று முதல்–அமைச்சர் விஜய், சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனைக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, பச்சிளம் குழந்தைகளை தூக்கி கொஞ்சினார். இந்தக் காட்சி, கர்நாடக மாநிலத்தில் உள்ள தனியார் தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடப்பட்டதுடன், அந்நிறுவனத்தின் சமூக வலைதளங்களிலும் வீடியோவாக காட்சிப்படுத்தப்பட்டது. இது அங்குள்ள விஜய் ரசிகர்களையும், பொதுமக்களையும் வெகுவாக கவர்ந்தது.

பலர் அந்த வீடியோவுக்கு கீழே, 'கமெண்ட்' பகுதியில் தங்களுடைய கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அதில், "இப்படி ஒரு முதல்வரை பெற்ற தமிழக மக்கள் கொடுத்து வைத்தவர்கள்", "கர்நாடகாவில் இவர்தான் நிக்கிறாரு", "இந்த தலைவர் நம்ம கர்நாடகாவுக்கு வரனும்", "கர்நாடகாவுக்கு இந்த தலைவனை கொடு இறைவா", "தமிழக மக்கள் ரொம்ப அதிர்ஷ்டம் செய்திருக்கிறார்கள்", "தமிழக மக்கள் சரியாக தேர்வு செய்திருக்கிறார்கள்" என்று பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விஜய்யின் புகழ்**

மொத்தத்தில், தமிழகத்தையும் தாண்டி அண்டை மாநிலங்களிலும் முதல்–அமைச்சர் விஜய்யின் புகழ் பரவத் தொடங்கியிருக்கிறது. அங்குள்ள ரசிகர் மன்றங்களும் அரசியல் இயக்கமாக உருவெடுத்தால், தென்மாநில முக்கிய அரசியல் தலைவராக விஜய் உருவெடுப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

# ஆகஸ்டு முதல் பெண்களுக்கு மாதம் ரூ.2,500!



புதுடெல்லி, ஜூலை. 09–

பெண்களுக்கான உதவித்தொகை திட்டம், ரக்சா பந்தன் தினத்தை யொட்டி வருகிற ஆகஸ்டு மாதம் 28–ந் தேதி தொடங்க டெல்லி அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

டெல்லி சட்டமன்றத் தேர்தல் கடந்த ஆண்டு பிப்ரவரி 5ம் தேதி நடைபெற்றது. ஆம் ஆத்மி, பாஜக, காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளிடையே மும்முனை போட்டி நிலவியது.

அப்போது, மக்களின் வாக்குகளை கவரும் வகையில், கவர்ச்சிகரமான தேர்தல் வாக்குறுதிகளை 3 கட்சிகளும் அறிவித்தன. இதில், ஒன்று தான் மகளிருக்கான உரிமைத் தொகை. இந்த தேர்தலில் பாஜக வென்று ஆட்சியை பிடித்தது. முதலமைச்சராக ரேகா குப்தா பதவி ஏற்றார்.

தமிழ்நாட்டில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக அளித்த வாக்குறுதிகளில் மகளிருக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

திமுகவை தொடர்ந்து, காங்கிரஸ் கட்சி கர்நாடகா, தெலங்கானாவில் இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. பாஜக தரப்பில் மகாராஷ்டிரா, சத்தீஸ்கர் மாநிலங்களில் மகளிர் உரிமைத் தொகை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில், தற்போது டெல்லியிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஆனால், தமிழ்நாட்டை விட மற்ற மாநிலங்களில் மாதந்தோறும் வழங்கும் தொகை இரண்டு மடங்கு அதிகமாகும்.

தமிழகத்தில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்றார். தவெக சார்பில் விஜய் அறிவித்த வாக்குறுதிகளில் மகளிருக்கு உரிமைத் தொகையாக ரூ.2500 வழங்கப்படும என அறிவித்தார்.

ஆனால், தமிழகத்தில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக தற்போதைக்கு ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. விரைவில், ரூ.2500 வழங்கப்படும்என அறிவிக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்கது.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பொட்டகவயல் ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே.கே.கதிரவன் பரமக்குடி வட்டாட்சியர் ராமமூர்த்தி வட்டாட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் காதர் முஹையதீன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர் .

# தமிழகத்துக்கு தண்ணீர் தர இயலாது - நீர்ப்பாசனத்துறை மந்திரி திட்டவட்டம்!



கர்நாடகா, ஜூலை. 09–

கர்நாடக நீர்ப்பாசனத்துறை மந்திரி ராமலிங்க ரெட்டி கூறியதாவது:–

கர்நாடகாவில் போதிய மழை இல்லாததால் அணைகள் நிரம்பவில்லை. எனவே தமிழகத்துக்கு இப்போதைக்கு நீர் தர இயலாது. தமிழகத்திற்கு நீர் தர வேண்டும் என்று காவிரி மேலாண்மை வாரியமும் எங்களுக்கு உத்தரவிடவில்லை. ஏனென்றால் கர்நாடகாவில் நீர் இல்லை என்பது அவர்களுக்கே தெரியும். நீர் திறக்க வேண்டும் என்று தமிழக அரசிடம் இருந்து கோரிக்கை வந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் தமிழகத்துக்கு இவ்வளவு நீர் கர்நாடகம் தர வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், எங்களிடம் தருவதற்கு போதிய நீர் இல்லை. எப்போது தமிழகத்துக்கு நீர் திறக்கப்படும் என்று கேட்டால், அது மழை பெய்வதை வைத்து சொல்ல முடியும். இப்போது வரை நல்ல மழை பெய்யவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# பள்ளி பாடப்புத்தகங்கள் தட்டுப்பாடு ஏன்?- தமிழக அரசு விளக்கம்!



சென்னை, ஜூலை. 09–

பள்ளிக்கல்வித்துறை செயலாளர் சந்திரமோகன் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

இந்தக்கல்வியாண்டிற்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதிலோ அல்லது ஆரம்பகட்ட வினியோகத்திலோ எந்தத் தாமதமும் ஏற்படவில்லை என்பதைப் பள்ளிக்கல்வித்துறை தெளிவுபடுத்த விரும்புகிறது.

பள்ளிகளால் வழங்கப்பட்ட அசல் மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் அனைத்துப் பாடப் புத்தகங்களும் கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பே அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, பல்வேறு வகுப்புகள் மற்றும் பள்ளிகளில் கணிசமான எண்ணிக்கையில் புதிய மாணவர் சேர்க்கை நடை பெற்றது. இந்தக் கூடுதல் மாணவர் சேர்க்கையை ஒருங்கிணைத்த பிறகு, தொடக்கக் கல்வி இயக்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் சுமார் 80 ஆயிரம் பாடப் புத்தகங்கள் கூடுதலாகத் தேவைப்படுவது கண்டறியப்பட்டது.

கல்வித்துறை உடனடியாக இந்தக் கூடுதல் எண்ணிக்கையிலான பாடப்புத்தகங்களை அச்சிட்டு வினியோகிக்கும் பணியை மேற்கொண்டது. தற்போது வினியோகம் நிறைவடைத்துள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு வினியோகிக்கும் செயல்முறை இறுதி செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கூடுதல் வினியோகத்தில் தேவையான பயிற்சிப் புத்தகங்களும் அடங்கும், இதன் மூலம் புதிதாகச் சேர்க்கப்பட்ட மாணவர்கள் முழுமையான கற்றல் வளங்களைப் பெறுவதை உறுதி செய்கிறது.

எனவே, சில பள்ளிகளில் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட தற்காலிகப் பற்றாக் குறை, கல்வியாண்டு தொடங்கிய பிறகு ஏற்பட்ட புதிய மாணவர் சேர்க்கையின் காரணமாக மட்டுமே ஏற்பட்டது என்றும், கல்வித்துறையின் திட்டமிடல் அல்லது அச்சிடும் செயல்முறையில் உள்ள எந்தக் குறைபாட்டினாலும் அல்ல என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது.

திருத்தப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற கல்வித்துறை உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது, மேலும் தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் தேவையான பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சகோதரரை தாக்கிய வழக்கு: அமைச்சர் மரிய வில்சன் ஆஜராக விலக்கு!



புதுச்சேரி, ஜூலை. 09–

புதுச்சேரி கோர்ட்டில் நிதி அமைச்சர் மரிய வில்சன் ஆஜராவதில் இருந்து சென்னை ஐகோர்ட்டு விலக்கு அளித்துள்ளது .

சொத்து தகராறில் சகோதரர், அவரது மனைவியை தாக்கியதாக நிதி அமைச்சர் மரிய வில்சன் மீது பதியப்பட்ட குடும்ப பிரச்னை தொடர்பான வழக்கை சமரச தீர்வு மையத்திற்கு அனுப்பி நீதிபதி இளந்திரையன் உத்தரவு பிறப்பித்தார். மேலும் வரும் 13 ஆம் தேதி சென்னை ஐகோர்ட்டின் சமரச தீர்வு மையத்தில் ஆஜராக அமைச்சர் மரிய வில்சனுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



பழனி முருகன் கோவில் அன்னதான திட்டத்திற்கு ரூ 7 லட்சம் நன்கொடை செலுத்திய குங்குமராஜ் என்பவருக்கு வைர அட்டையை கோயில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து வழங்கினார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020